பக்கங்கள் 15+3

மாலை முரசு

முழக்கம்: 03 | வள்ளுவ ஆண்டு 2057 | புரட்டாதி 02 வியாழக்கிழமை 18.09.2025 | அதிர்வு 49

## இளைஞர் ஒருவர் கொடூரக் கொலை

### கால்வாயில் இருந்து சடலம் மீட்பு



திஸ்ஸமஹாராமபொலிஸ் பிரிவுக்குட்பட்ட சந்துங்கம பிரகதி மாவத்தை பகுதியிலுள்ள கால்வாயில் 02

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்

### அரசின் தீர்மானத்துக்கு எதிராக

# மின்சார சபை ஊழியர்கள் இன்றும் பெரும் போராட்டம்

### காலி வீதியில் கடும் போக்குவரத்து நெரிசல்



மின்சார சபையை நான்கு பங்குகளாகப் பிரிக்கும் அரசின் தீர்மானத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து இன்றும் இலங்கை மின்சார சபை பிரதான காரியாலயத்துக்கு முன்பாகக் கொட்டும் மழையிலும் மின்சார சபை தொழிற்சங்கங்கள் ஆர்ப்பாட்டம் செய்துள்ளன.

வீதியை மறித்து நூற்றுக்கணக்கான மின்சார சபை ஊழியர்கள் போராட்டத்தில் ஈடுபட்ட நிலையில் காலி வீதியில் கடும் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது. 03



# 16 வருடங்களுக்கு முன்னர் நடைபெற்ற போர்க் குற்றங்களுக்கு இலங்கை தண்டிக்கப்படாததே காஸா மீறல்களுக்கும் காரணம்

### மனித உரிமைகள் கண்காணிப்பகம் சுட்டிக்காட்டு



“16 வருடங்களுக்கு முன்னர் நடந்த மீறல்களுக்காக இலங்கை இன்னமும் தண்டிக்கப்படவில்லை. இன்று காஸாவில் நிகழ்த்தப்படும் மீறல்கள் – பிரயோகிக்கப்படும் உத்திகளுக்கும் இதுவே முன்னுதாரணம்.” – என்று மனித உரிமைகள் கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது.

மேலும், இத்தகைய பின்னணியில் ஐ. நா. மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் ஊடாக முன்னெடுக்கப்பட்டுவரும் இலங்கை தொடர்பான பொறுப்புக் கூறல் செயல்திட்டம் இன்றியமையாதது. இது, இலங்கையில் மனித உரிமைகளைப் பாதுகாப்பது மட்டுமின்றி – உலகெங்கிலும் தொடரும் தண்டனைகளிலிருந்து விடுபடும் போக்கை சவாலுக்கு உட்படுத்தவும் மிக அவசியமானது என்றும் 02



# இந்திய மீனவர்கள் 7 பேருக்கும் மீண்டும் விளக்கமறியல் நீடிப்பு!

யாழ். நெடுந்தீவு கடற்பரப்பில் கடந்த மாதம் 13ஆம் திகதி கைது செய்யப்பட்ட 7 இந்திய மீனவர்களையும் எதிர்வரும் 24ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்றம் இன்று உத்தரவு பிறப்பித்துள்ளது.

இலங்கைக் கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்து மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் கடந்த மாதம் 13ஆம் திகதி நெடுந்தீவு அருகே கைது செய்யப்பட்ட 7 இந்திய மீனவர்களும் இன்று ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டனர். இதன்போதே இவர்களது விளக்கமறியல் மேலும் நீடிக்கப்பட்டது.

இவர்கள் கடந்த மாதம் 20ஆம் திகதி நீதிமன்ற உத்தரவின் பேரில் வழக்கு விசாரணைக்காக நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டபோது இம்மாதம் 3ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க நீதிவான் உத்தரவிட்டிருந்த நிலையில் அன்றைய தினம் வலக்கை விசாரணைக்கு எடுத்துக்கொண்ட நீதிவான் நேற்று (17) வரை விளக்கமறியல் நீடிக்கப்பட்டது. நேற்று அவர்கள் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட போது இன்று வரை விளக்கமறியல் நீடிக்கப்பட்டது.

இந்நிலையில், மீண்டும் இன்று வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது 7 இந்திய மீனவர்களது விளக்கமறியலை எதிர்வரும் 24ஆம் திகதி வரை நீடித்து நீதிவான் உத்தரவு பிறப்பித்தார்.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### 16 வருடங்களுக்கு...

அந்த அமைப்பு தெரிவித்துள்ளது.

“உலகளாவிய ரீதியில் மக்களை அதிர்ச்சிக்கு உள்ளாக்கிய பல அட்டூழியங்கள் குறித்த ஞாபகங்கள், சில வருடங்களில் வேறு புதிய மீறல் சம்பவங்களால் மாற்றி எழுதப்படும். ஆனால், மீறல்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கும், அவர்களின் குடும்பத்தினருக்கும் அதனால் ஏற்பட்ட துயரம் என்பது முடிவற்றதாகும். தீர்வு அளிக்கப்படாத குற்றங்கள் அதனை ஒத்த எதிர்கால மீறல்களுக்கான முன்மாதிரியாகத் திகழ்கின்றன.

இலங்கை அரசால் 2009ஆம் ஆண்டு தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கம் தோற்கடிக்கப்பட்டது. இதன்விளைவாக ஆயிரக்கணக்கானோர் கொல்லப்பட்டனர். ஐக்கிய நாடுகள் சபையால் கண்டறியப்பட்டதன் பிரகாரம் இந்தப் போரில் ஈடுபட்ட இரு தரப்பினராலும் சட்டங்களுக்குப் புறம்பான விதத்தில் மனிதகுலத்துக்கு எதிராக மிகமோசமான குற்றங்கள் இழைக்கப்பட்டன. இருப்பினும், அவை இன்றளவிலே இஸ்ரேலிய இராணுவ அதிகாரிகள் சிலரால் தொடர்ந்து முன்னெடுக்கப்படுகின்றன. கடந்த காலங்களில் நிகழ்த்தப்பட்ட அட்டூழியங்களுக்கான எந்தவொரு எதிர்விளைவும் இல்லாததன் காரணமாக இது சாத்தியமாகியிருக்கின்றது.

இலங்கையில் இதுவரை ஆட்சிப் பீடமேறிய அரசுகள் சர்வதேச சட்டத்தை நிலைநிறுத்துவதாக வாக்குறுதியளித்துவிட்டு, அதிலிருந்து விலகிச் செயலபட்டு வந்திருப்பதன் மூலம், எதனை செய்தாலும் பின்விளைவுகளின்றி மீண்டுவிடலாம் என்பதைக் காண்பித்து வந்திருக்கின்றன. ஆகையால், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை பொறுப்புக்கூறலைத் தொடர்ந்து வலியுறுத்துவதுடன் இலங்கையால் நிகழ்த்தப்பட்ட சர்வதேச குற்றங்கள் தொடர்பான ஆதாரங்களைத் திரட்டுவதற்குரிய ஆணையை தற்போது நடக்கும் கூட்டத்தொடரில் புதுப்பிக்க வேண்டும்.

இலங்கையில் சுமார் 26 வருட காலமாக நீடித்த உள்நாட்டு போரில் பொதுமக்கள் மீதான தாக்குதல்கள், சட்டவிரோத படுகொலைகள், வலிந்து காணாமல் ஆக்கப்படல்கள் என்பன உள்ளடங்கலாக இரு தரப்பினராலும் மிகமோசமான மீறல்கள் – குற்றங்கள் இழைக்கப்பட்டன. இறுதிக்கட்டப் போர் இடம்பெற்ற சில மாதங்களில் எஞ்சியிருந்த விடுதலைப்புலிகள் இயக்க உறுப்பினர்களும் தமிழ் பொதுமக்களும் இலங்கை இராணுவத்தால் மிகக்குறுகிய பகுதிக்குள் சுற்றிவளைக்கப்பட்டனர்.

விடுதலைப்புலிகள் பொதுமக்களை மனித கேடயங்களாகப் பயன்படுத்திய அதேவேளை, இலங்கை இராணுவம் மனிதாபிமான உதவிகள் உட்செல்வதைத் தடுத்ததுடன், குறித்த சில பகுதிகள்மீது வான் மற்றும் எறிகணை தாக்குதல்களை நடாத்துவதற்கு முன்னர் அவற்றை ‘யுத்த சூனிய வலயங்களாக’ அறிவித்தது. மருத்துவ சேவை வழங்கல்கள் தொடர்ந்து இலக்கு வைக்கப்பட்டன. இலங்கையில் 16 வருடங்களுக்கு முன்னர் நிகழ்ந்து, இன்னமும் தண்டிக்கப்படாமல் உள்ள இந்தச் சம்பவங்கள் இன்றளவிலே காஸாவில் நிகழ்த்தப்படும் மீறல்களுக்கும் அங்கு பிரயோகிக்கப்படும் உத்திகளுக்குமான முன்னோடியாக உள்ளன.

ஜே. வி. பி. எழுச்சி மற்றும் விடுதலைப் புலிகள் இயக்கத்துடனான யுத்தம் என்பவற்றுடன் தொடர்புபட்ட விதத்தில் நாடளாவிய ரீதியில் இதுவரை சுமார் 20 மனிதப் புதைகுழிகள் கண்டறியப்பட்டுள்ளன. அவை பெரும்பாலும் வேறு பணிகளின்போதுதற்செயலாகவேகண்டறியப்பட்டன. அண்மையில், அடையாளம் காணப்பட்ட செம்மணி மனிதப் புதைகுழியில் 1990 களில் இராணுவக் காவலின் கீழ் கொல்லப்பட்டிருக்கக்கூடும் என நம்பப்படும் 200இற்கும் மேற்பட்டோரின் எலும்புக்கூடுகள் கண்டறியப்பட்டுள்ளன.

இருப்பினும் போதிய தொழில்நுட்ப வசதிகள் இன்மை மற்றும் அரசியல் தன்முனைப்பு இன்மை போன்ற காரணங்களால் இதுவரையில் இலங்கையில் எந்தவொரு மனிதப் புதைகுழி தொடர்பிலும் விசாரணைகள் வெற்றிகரமான முறையில் முன்னெடுக்கப்படவில்லை.

இவ்வாறானதொரு பின்னணியில் ஐ. நா. மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் ஊடாக முன்னெடுக்கப்பட்டுவரும் இலங்கை தொடர்பான பொறுப்புக்கூறல் செயல் திட்டம் இன்றியமையாதது. இது இலங்கையில் மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கு மாத்திரமன்றி, உலகெங்கிலும் தொடரும் தண்டனைகளிலிருந்து விடுபடும் போக்கை சவாலுக்கு உட்படுத்துவதற்கும் அவசியமானது.” – என்று மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் ஆசிய பிராந்திய பிரதிப் பணிப்பாளர் மீனாக்ஷி கங்குலி எழுதியுள்ள கட்டுரை ஒன்றில் குறிப்பிட்டுள்ளார்.

### இளைஞர் ஒருவர்...

இருந்து இளைஞர் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

நேற்று மாலை திஸ்ஸமஹாராம பொலிஸ் நிலையத்துக்குக் கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டன.

தனிப்பட்ட தகராறு காரணமாக உயிரிழந்தவர் அவரது நண்பனால் போத்தலொன்றால் தாக்கப்பட்டு நீரில் மூழ்கடிக்கப்பட்டுப் படுகொலை செய்யப்பட்டார் என்று பொலிஸ் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் 24 வயதான சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மேலதிக விசாரணைகள் திஸ்ஸமஹாராம பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## முதலாம் பக்கத் தொடர்ச்சி



**மின்சார சபை ஊழியர்கள்...**

மின்சார சபையை நான்கு பங்குகளாகப் பிரிக்கும் அரசின் தீர்மானத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து மின்சார சபை தொழிற்சங்கங்களால் முன்னெடுக்கப்பட்டுள்ள சுகயீன விடுமுறை தொழிற்சங்க நடவடிக்கை இன்றும் இரண்டாவது நாளாக இடம்பெற்றது.

இதன் காரணமாக நாடளாவிய ரீதியில் உள்ள மின்சார சபை கிளைகளில் நிலவிய ஊழியர் பற்றாக்குறையால் மட்டுப்படுத்தப்பட்ட சேவைகள் மாத்திரமே பயனர்களுக்கு வழங்கப்பட்டது.

அத்தோடு மின்சார சபை ஊழியர்களின் வரப்பிரசாதங்களை குறைக்கும் அரசின் தீர்மானத்தை இரத்துச் செய்யுமாறு தெரிவித்து இன்றும் மின்சார சபை ஊழியர்கள் கொழும்பில் அமைந்துள்ள இலங்கை மின்சார சபை பிரதான காரியாலயத்துக்கு முன்பாக ஒன்றுகூடிய ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

மின்சார சபை ஊழியர்களின் தொழில் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதோடு ஊழியர்களுக்கு இதுவரை வழங்கப்பட்டு வந்த சலுகை மற்றும் கொடுப்பனவை மீள வழங்குமாறு இலங்கை மின்சார சபை அனைத்து தொழிற்சங்கங்களின் ஒன்றியத்தின் பிரதிநிதிகள் அரசை வலியுறுத்தினர்.

முற்பகல் 11.30 மணியளவில் நூற்றுக்கணக்கான போராட்டக்காரர்கள் மின்சார சபைக்கு முன்பாக கூடியிருந்ததுடன், பாதையின் இருமருங்கிலும் போராட்டக்காரர்கள் குவிந்தும் வீதியை மறித்தும் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதனால் காலி வீதியில் கடும் வாகன நெரிசல் ஏற்பட்டிருந்ததுடன் சில மணி நேரத்துக்கு போக்குவரத்து நடவடிக்கைகளும் பாதிக்கப்பட்டிருந்தன.

நிலைமையைக் கட்டுக்குள் கொண்டு வருவதற்காகவும், போக்குவரத்தைச் சீர்செய்வதற்காகவும் பெருமளவான பொலிஸாரும் இராணுவத்தினரும் போராட்டக்களத்துக்கு வரவழைக்கப்பட்டனர்.

இதேவேளை மின்சார சபை தொழிற்சங்கங்களின் போராட்டம் தொடர்பில் இலங்கை மின்சார சபை சுதந்திர ஊழியர் சங்கத்தின் செயலாளர் பிரபாத் பிரியந்த குறிப்பிடுகையில்,

“எமது தொழிற்சங்க நடவடிக்கையின் பிரகாரம் இன்றும் 10 ஆயிரத்துக்கும் அதிகளவான மின்சார சபை ஊழியர்கள் சுகயீன விடுமுறை அறிவித்து தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

நேற்றும் இன்றும் மழையில் நனைந்தபடி போராட்டத்தை முன்னெடுத்திருந்தோம். மின் பயனர்களை அசௌகரியத்துக்கு ஆளாக்காது பேச்சுவார்த்தையினூடாக இதற்குத் தீர்வு காணுமாறு அரசிடம் கோரிக்கை விடுக்கின்றோம். ஜனாதிபதி நேற்று நிகழ்வொன்றில் கலந்துகொண்டு மின்சார ஊழியர்களைக் கண்டித்திருந்தார்.

இந்தப் பிரச்சினையை முறையாகப் புரிந்துகொள்ளாமல் அரச தரப்பினர் வேறு கோணத்தில் அணுகுகின்றனர். எவ்வாறெனினும் எமது கோரிக்கைகளுக்கு உரிய தரப்பினர் கவனத்தில் கொள்ளாத பட்சத்தில் எதிர்வரும் 21ஆம் திகதிக்குப் பின்னர் பாரிய தொழிற்சங்கப் போராட்டத்தை முன்னெடுக்கத் தீர்மானித்துள்ளோம்.” - என்றார்.





# வவுனியாவில் தியாகி திலீபனின் நினைவேந்தல்

(கி.வசந்தன்)

தியாகி திலீபனின் 38 ஆவது நினைவேந்தல் நிகழ்வு வவுனியா மாநகர சபை வாயிலில் அமைந்துள்ள பொங்குதமிழ் நினைவுத் தூபியில் இன்று நடைபெற்றது.

இதன்போது திலீபனின் திருவுருவப் படத்துக்கு மலர்மாலை அணிவிக்கபட்டு, ஈகைச்சுடர் ஏற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினரால் ஏற்பாடு செய்யபட்ட இந்த நிகழ்வில் கட்சியின் மாவட்ட அமைப்பாளர் எஸ். தவபாலன், காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தினர், வவுனியா மாநகர சபை மேயர் சு.காண்டீபன், மாநகர சபை உறுப்பினர் தர்மரத்தினம், வவுனியா தெற்கு பிரதேச சபை உறுப்பினர் சுரேஷ் மற்றும் பொதுமக்கள் கலந்துகொண்டனர்.

இதேவேளை, இந்தப் பகுதியில் எதிர்வரும் 26 ஆம் திகதி வரை திலீபனுக்கான அஞ்சலி நிகழ்வுகளை மேற்கொள்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதுடன் 25ஆம் திகதி காலை முதல் ஒருநாள் அடையாள உண்ணாவிரதப் போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளதாகவும்  ஏற்பாட்டுக் குழு தீர்மானித்துள்ளது.



















# மந்திரிமனையைப் பார்வையிட்ட சிறீதரன்

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம் இராச்சியத்தின் அடையாளமாக உள்ள மந்திரிமனையை இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற குழுவின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சிவஞானம் சிறீதரன் இன்று பார்வையிட்டார்

தமிழ் இராச்சிய வரலாற்றில் மிகப் பிந்திய அடையாளமாக உள்ள மந்திரிமனை அழிந்து போனால் தமிழர் வரலாறும் அழிக்கப்படும் அபாயம் உள்ளதாக வருகை தந்த அதிகாரிகளுக்கு நாடாளுமன்ற உறுப்பினர் தெரிவித்தார்.

ஜமுனா ஏரி, மந்திரிமனை, சங்கிலியன் முகப்பு என்பன யாழ்ப்பாணம் மண்ணின் தமிழர் வரலாற்றின் முக்கியத்துவம் மிக்க பகுதிகள் எனவும், அவற்றைத் தொடர்ந்து பாதுகாக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனவும் நாடாளுமன்ற உறுப்பினர் சுட்டிக்காட்டினார்.

நாடாளுமன்ற உறுப்பினருடன் யாழ்ப்பாணம் – கிளிநொச்சி மாவட்டங்களின் தொல்லியல் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் பந்துல ஜீவ, புனர்நிர்மாண உத்தியோகத்தர் கபிலன், யாழ். நல்லூர் வலயத்தின் உத்தியோகத்தர் மணிமாறன், கனியவள அளவையியலாளர் அமர்நாத், யாழ்ப்பாணம் மரபுரிமை மையத்தின் உறுப்பினர் வரதராஜன் பார்த்திபன் ஆகியோர் இதன்போது உடனிருந்தனர்.

யாழ்ப்பாணத்தில் நேற்று பெய்த மழை காரணமாக தொல்பொருள் சின்னமான மந்திரிமனையின் ஒரு பக்கம் இடிந்து விழுந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.















# ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யுமாறு கோரி மாணவர்களின் பெற்றோர்கள் ஆர்ப்பாட்டம்

**(கி.வசந்தன்)**

வவுனியா வடக்கு, கோயில் புளியங்குளம் முத்தமிழ் வித்தியாலயத்தில் தொடர்ச்சியாக நிலவும் ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்து தருமாறு கோரி மாணவர்களின் பெற்றோர்கள் இன்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

“ஆசிரியர் பற்றாக்குறை தொடர்பாக பல தடவைகள் வலயக் கல்விப் பணிமனை மற்றும் மாகாணக் கல்வி அமைச்சுக்குத் தெரியப்படுத்தியும் இதுவரை தீர்வு கிடைக்கவில்லை. இதனால் மாணவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். எனவே, ஆசிரியர் பற்றாக்குறையைச் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடனடியாக நிவர்த்தி செய்து தர வேண்டும்.” – என்று ஆர்ப்பாட்டக்காரர்கள் கோரிக்கை விடுத்தனர்.

இந்த ஆர்ப்பாட்டம் தொடர்பாக வவுனியா வடக்கு வலயக் கல்விப் பணிப்பாளரிடம் தொடர்பு கொண்டு கேட்ட போது, விரைவில் இந்தப் பாடசாலையின் ஆசிரியர் பற்றாக்குறை நிவர்த்தி செய்யப்படும் என்று உறுதியளித்தார்.






நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# அபத்தப் பிரசாரம்

“2022 ஆம் ஆண்டில் எரிபொருள் வரிசைகளிலும் எரிவாயு வரிசைகளிலும் மக்கள் நின்று இறந்தமை போன்ற ஒரு நெருக்கடி நிலை மீண்டும் ஏற்பட நாங்கள் இடமளிக்க மாட்டோம்.”

- இவ்வாறு நேற்றுக் கொலன்னாவை பெற்றோலியக் களஞ்சிய வளாகத்தில் ஆறு எண்ணைக் களஞ்சிய தாங்கிகளின் நிர்மாணப் பணிகளை ஆரம்பித்து வைக்கும் நிகழ்வில் சூளுரைத்திருக்கின்றார் ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க.

இலங்கை மக்கள் எவருமே மீண்டும் அந்த 2022 நெருக்கடி காலப்பகுதி ஏற்படுவதை விரும்பவில்லை. ஜனாதிபதிக்கும் அவரது அரசுக்கும் கூட அப்படி ஒரு நிலைமை ஏற்படாமல் பார்த்துக் கொள்ள வேண்டும் என்ற விருப்பமும் கடப்பாடும் இருப்பது மறுக்கத்தக்கது அல்ல.

ஆனால், வெறும் வாய்ப் பேச்சு அத்தகைய நெருக்கடி நிலை மீண்டும் ஏற்படாமல் பாதுகாக்குமா என்பதுதான் கேள்வி.

வெறுங்கை முழம் போடுவதில் அர்த்தமில்லை. ஜனாதிபதியின் பேச்சும் கூட அத்தகைய அரசியல் சவடால் உரை மாதிரித்தான் தோன்றுகின்றது.

2022 நெருக்கடி நிலை போன்ற சூழல் ஏற்படாமல் இருப்பதற்கு பொருளாதார ரீதியில் நாட்டை எத்தகைய முறையில் காபந்து பண்ணி இருக்கிறார் இந்த ஜனாதிபதி என்று கேட்டால் பொது மக்களும் பொருளாதார நிபுணர்களும் கூட கைவிரிப்பதைத் தவிர வேறு வழி இல்லை என்பதுதான் உண்மை நிலைவரமாகும்.

2022 இல் நாட்டின் பொருளாதாரம் மிக மோசமாக அதலபாதாளத்தில் விழுந்து, வெளிநாட்டுக் கடனிறுக்க வழியின்றி நாடு வங்குரோத்து நிலையை அடைந்த போது, நாட்டின் ஜனாதிபதிப் பதவியை ஏற்ற ரணில் விக்கிரமசிங்க நெருக்கடி நிலையை சமாளிப்பதற்கான ஒரு பொருளாதாரத் திட்டத்தைக் கொண்டு வந்து அதை முன் நகர்த்தினார்.

அந்தத் தண்டவாளத்தில்தான் சற்றும் மாற்றமில்லாமல் நாட்டின் பொருளாதார ரயிலை நகர்த்திச் செல்லுகின்றார் இப்போதைய ஜனாதிபதி அநுராகுமார திஸநாயக்க.

வெளிநாட்டுக் கடன்களை மீளச் செலுத்த வழியில்லாத இலங்கைக்கு, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சர்வ தேச நாணய நிதியத்துடன் சேர்ந்து முன்னெடுத்த நகர்வுகள் காரணமாக, 2028 வரை கடன் மீள்செலுத்துகைக்கு விலக்களித்து, இலங்கைக்கு உதவுகின்றன கடன் வழங்கிய நாடுகளும் நிறுவனங்களும்.

அந்தப் பின்புலத்தில், அப்போதைய நெருக்கடியை சமாளிக்க ரணில் விக்கிரமசிங்க போட்ட நெருக்கடி கால பொருளாதாரத் தடத்தில் புதிய முன்னேற்றம், மாற்றம் எதுவுமின்றி, நாட்டை நகர்த்துகின்றார் ஜனாதிபதி அநுராகுமார திஸநாயக்க.

2028 இல் நாட்டின் பழைய கடன் நிலுவைகளின்படி கடன் தொகையை மீளச் செலுத்தத் தொடங்குவதானால், அச்சமயத்தில் நாட்டின் பொருளாதாரம் ஸ்திரமாகவும் வலிமையாகவும் மாறி இருக்க வேண்டும்.

இறக்குமதிப் பொருளாதாரத்தை கைவிட்டு, ஏற்றுமதிப் பொருளாதாரத்தை நாம் வடிவமைத்திருக்க வேண்டும். அதற்கு நாட்டின் தேசிய உற்பத்தி ஆறு வீதத்துக்கு அப்பால் முன்னேறி இருக்க வேண்டும்.

ஆனால் நாடு ஏற்றுமதிப் பொருளாதாரத்தையும் உறுதிப்படுத்தவில்லை. தேசிய உற்பத்தியையும் மேம்படுத்தவில்லை. அப்படி அவை மேம்படுவதற்கான சாத்தியமும் தென்படவில்லை. இந்தச் சூழலில் கடன் மீளளிப்பு நெருக்கடி தவிர்க்கவே முடியாமல் 2028 இல் வரும் போது நாடு மீண்டும் சிக்கலை எதிர்கொள்ளும். எரிபொருள் வரிசையும் எரிவாயு வரிசையும் கூட தவிர்க்க முடியாதவையாகும்.

நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்தி அதனை ஏற்றுமதி பொருளாதாரமாக மாற்றி, தேசிய உற்பத்தியை அதிகரிக்கச் செய்து விட்டுத்தான் - அல்லது அதற்கான உறுதிப்படுத்தலைச் செய்து விட்டுத்தான் - நாட்டில் மீண்டும் எரிபொருள் வரிசை வராது, எரிவாயு வரிசை வராது என்று சூளுரைக்க வேண்டும்.

அதை விடுத்து, நெருக்கடி நிலையை எதிர்கொள்ள ஜனாதிபதி ரணில் கட்டமைத்த நெருக்கடி கால பொருளாதாரத்தில் தொடர்ந்து ஓடிக்கொண்டு, எரிபொருள் வரிசை, எரிவாயு வரிசை வராது என இலங்கை ஜனாதிபதி சூளுரைப்பது வெறும் அபத்தப் பிரசாரமாகவே படுகின்றது.

# மூளாயில் கண் பரிசோதனையும் இலவச மூக்குக் கண்ணாடி வழங்கலும்

தந்தை செல்வா நற்பணி மன்றத்தால் மூளாய் வேரம் பகுதியில் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு கண் பரிசோதனை செய்யப்பட்டு இலவச மூக்கு கண்ணாடி வழங்கலும் அறநெறிப் பாடசாலை ஆரம்ப நிகழ்வும் இடம்பெறவுள்ளன.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக சட்டத்தரணி சிவபாலசுப்பிரமணியமும், விசேட அதிதிகளாக வலிகாமம் மேற்கு பிரதேச சபையின் தவிசாளர் எஸ்.ஜெயந்தன், மூளாய் கிராம சேவையாளர் சிவரூபன், வலிகாமம் மேற்கு கலாசார உத்தியோகஸ்தர் ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர்.

இந்த நிகழ்வுக்கான ஏற்பாடுகளை மன்றத்தலைவர் உமாபதி, பொது செயலாளர் எஸ்.கே. தளையரட்ணம், ஜெயராஜ், ஆசிரியர் நிரோஜன் ஆகியோர் மேற்கொண்டுள்ளனர்.





# ‘சூரப்புலியார்’ அக்கினிச் சட்டி நிகழ்வு

**(உடப்பு க.மகாதேவன்)**

புத்தளம் மாவட்டம், உடப்பு ஸ்ரீ வீர பத்திரகாளியம்மன் ஆலயத்தின் வருடாந்த வேள்வி உற்சவத்தை முன்னிட்டு ‘சூரப்புலியார்’ அக்கினிச் சட்டி நிகழ்வு நேற்று (17)புதன்கிழமை இடம்பெற்றது.

வேள்ளிக்கரகத்துடன், காவல்காரர்களாக வலம்வரும் இருவரின் உதவியுடன் ஆண், பெண் பக்தர்கள் பலர் கலந்து கொண்டு இதனை நிறைவேற்றினர். நாளை (19) வேள்வி உற்சவம் நடைபெறவுள்ளது.



# சீரமைக்கப்படாத கடைத் தொகுதிகள் வியாபாரிகளுக்குப் பெரும் பாதிப்பு!





**(பா.சதீசன்)**

கரைதுறைப்பற்று பிரதேச சபையினரால் தபால் நிலைய வீதியில் புதிதாக க் கட்டி வாடகைக்கு விடப்பட்ட கடைத்தொகுதிகள் உட்கட்டமைப்பு வசதிகள் இன்றி வழங்கப்பட்டுள்ளதாக கடை உரிமையாளர்கள் குற்றச்சாட்டு முன்வைத்துள்ளனர்.

26 லட்சத்து 40 ஆயிரம் ரூபாய் முற்பணமாகவும் மாதம் 11,000 ரூபா வாடகைக்குயும் கொடுத்துக் கடைகளை எடுத்து நடத்தும் வியாபாரிகள் பல்வேறு இன்னல்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

இந்தக் கடைத்தொகுதிகளில் சுவர்கள் வெடித்து காணப்படுதல், தண்ணீர் கடைகளுக்குள் புகுதல், இதனால் குளிர்சாதன பெட்டிகள் பழுதடைதல், போன்ற பல்வேறு பிரச்சினைகள் தொடர்ந்து நிகழ்ந்து வருகின்றன.

இது தொடர்பாகக் கடை உரிமையாளர் ஒருவர் கூறும்போது, பூ மாலை கட்டி வியாபாரம் செய்வதே எமது பிரதான தொழிலாக காணப்படுவதனால் பூக்கள் பழுதடைந்தமையால் லட்சக்கணக்கான நட்டத்தை சந்தித்துள்ளேன். மூன்றாவது தடவையாக பூக்கள் அனைத்தும் அழுகி கொட்ட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

பல தடவைகள் கரைதுறைப்பற்று பிரதேச சபைக்கு எழுத்து மூலம் அறிவித்தும் எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. மேலும் அண்மையில் குறித்த கடைகளின் முன்பகுதியில் பிரதேச சபையினரால் வாய்க்கால் வெட்டியிருப்பதால் வாடிக்கையாளர்கள் கடைக்கு வர முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

வியாபாரம் செய்ய முடியாத நிலையில் பலர் குறித்த கடைத் தொகுதியில் எடுத்து கொண்ட கடைகளை பூட்டி விட்டுச் சென்றுள்ளனர். தற்போதும் கடைகளை எடுத்த ஏனையவர்களும் விட்டு செல்லும் நிலையிலும் இருக்கின்றனர்.

நேற்று (17) மழை பெய்ததால் பூக்கள் அனைத்தும் அழுகிய நிலையில், கடை உரிமையாளர் நேரடியாக பிரதேச சபைக்கு சென்று தீர்வு கோர சென்றபோதும், கூட்டம் நடப்பதால் சந்திக்க அனுமதி வழங்கப்படவில்லை எனவும் கூறியிருந்தார்.

வியாபாரிகள், பல லட்சம் ரூபா செலவழித்து எடுத்து கொண்ட கடைகளை நடத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இதற்கான உடனடி தீர்வை பிரதேச சபை வழங்க வேண்டும் என்று தெரிவித்தார்.

# இந்தியப் பிரதமரின் பிறந்த தினத்தை முன்னிட்டு திருக்கேதீச்சரத்தில் பூசை!



( வாஸ் கூஞ்ஞ)

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் 75 ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு நேற்று புதன் கிழமை (17) மன்னார் பாடல் தலமான திருக்கேதீச்சர ஆலயத்தில் மோடியின் பெயரில் சிறப்பு பூசை இடம்பெற்றது.

திருக்கேதீச்சர ஆலய திருப்பணி சபை தலைவர் எஸ்.எஸ்.இராமகிருஷ்ணன் மற்றும் உதவிச் செயலாளர் ம.நடேசானந்தன் ஆகியோரின் எற்பாட்டில் சிவ ஸ்ரீ சசி குருக்களால் இந்தச் சிறப்புப் பூசை இடம்பெற்றது.

திருக்கேதீச்சர திருப்பணிச் சபையினரும் இந்தியப் பிரதமருக்கும் வாழ்த்துக்களைத் தெரிவித்ததோடு அவர் தம் ஆயுள் ஆரோக்கியம் வேண்டி பிரார்த்தனையும் செய்தனர்.

இந்திய தூதரகம் மற்றும் துணைத் தூதரக ஏற்பாட்டில் இலங்கையில் பல ஆலயங்களில் சிறப்பு வழிபாடுகள் இடம்பெற்றமையும் குறிப்பிடத்தக்கது.






# கப்பம் வாங்கும் ஒரு சில பொலிஸார் இருக்கும்வரை சட்டவிரோத மண் அகழ்வுகளை நிறுத்துமுடியாது

## கிழக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் இரா. துரைரெட்ணம் தெரிவிப்பு

**(கனகராசா சரவணன்)**

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஒரு சில பொலிஸார் கப்பம் வாங்கும் வரைக்கும் சட்டவிரோத மண் அகழ்வை தடுத்து நிறுத்த வாய்ப்புக்கள் இல்லை எனவே அப்படிப்பட்ட பொலிஸாரை இனம் கண்டு அவர்களை உடனடியாக இடமாற்றம் செய்ய வேண்டும். எதிர்காலத்தில் சட்டம் ஒழுங்கை அமுல்படுத்தி, சட்டவிரோத மண் அகழ்வைத் தடுத்து நிறுத்த புதிய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு ஈ.பி.ஈர்.எல்.எப். மத்திய குழு உறுப்பினரும் கிழக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினருமான இரா. துரைரெட்ணம் தெரிவித்தார்.

மட்டக்களப்பு ஈ.பி.ஆர்.எல். எப். கட்சி அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடக வியலாளர் மாநாட்டில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

மாவட்டத்தில் வெல்லாவெளி, கொக்கட்டிச்சோலை, செங்கலடி, வவுணதீவு, கிரான், வாழைச்சேனை, வாகரை பிரதேச செயலகப் பிரிவின் கீழ் உள்ள பிரதேசங்களில் நீர்பாசனத் திணைக்களத்துடன் சம்மந்தப்பட்ட பெரிய ஆறுகள் வாய்க்கால்கள் உள்ளன.

இதில் பெரிய ஆறுகள் ஊடாக கிளை வாய்க்கால்களில் குறித்த பிரதேச செயலகப்பிரிவிலுள்ள பிரதேசங்களில் இரவு நேரங்களில் சனி, ஞாயிற்றுக்கிழமை உட்பட அனைத்து தினங்களிலும் மண் மாபியாக்களின் செயற்பாடு கடந்த காலங்களில் அதிகரித்த வண்ணம் இருந்தன. அதை கட்டுப்படுத்துவதற்குச் சட்டம் ஒழுங்கைக் கடைபிடிப்பவர்கள் மட்டுமல்ல நீர்பாசன திணைக்களத்துக்கும் அந்த பங்கு இருக்கின்றது. அதுமட்டுமல்ல ஒரு சில விவசாய அமைப்புக்களும் மண் அகழ்வதற்கான கடிதங்களையும் வழங்கியுள்ளன.

இந்த திணைக்களங்கள் மாவட்டத்தில் சுற்று சூழல் தொடர்பாக அறிக்கை வழங்கும் திணைக்களம், பிரதேச செயலகம் மற்றும் மண்ணுடன் சம்மந்தப்பட்ட திணைக்களங்கள் இந்த சட்டவிரோத மண் அகழ்வைக் கட்டுப்படுத்த முடியும் ஆனால் விசேட அதிரடிப்படை, பொலிஸ், இராணுவம் தலையிட்டு மண் மாபியாக்களைக் கட்டுப்படுத்தும் நிலை மாறியிருக்கின்றது.

எமது மாவட்டம் கடற்கரையை அண்டிய பகுதி எனவே இந்த மண் அகழ்வைத் தடுத்து நிறுத்தாத பட்சத்தில் பல கிராமங்கள் வெள்ளத்தால் அள்ளுண்டு செல்லக் கூடிய அபாயகரமான நிலைமைகள் தோற்றுவிக்கப்பட்டிருக்கின்றன. விவசாயச் செய்கை முழுமையாகப் பாதிப்படைய கூடிய சூழ்நிலைகள் இருக்கின்றது.

செங்கலடி பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட பல மண் மேடுகள் இல்லாமல் ஆக்கப்பட்டுள்ளது. ஆகவே கடந்த காலத்தில் மௌனமாக இருந்த பல திணைக்களங்கள் சட்டம் ஒழுங்கை நிலைநாட்டுகின்ற பொலிஸார் திணைக்கள தலைவர்கள் இந்த மண் மாபியாக்களை தடுத்து நிறுத்துவதற்கு உரிய நடவடிக்கையை மேற்கொள்ளவேண்டும்.

அதேவேளை, மாவட்டத்தில் கப்பம் வாங்கும் சில பொலிஸ்காரர்கள் இருக்கும்வரை சட்டவிரோத மண் அகழ்வை தடுத்து நிறுத்த முடியாது. எனவே அப்படிப்பட்ட பொலிஸ்காரர்களை இனம் கண்டு அவர்களை உடனடியாக இடமாற்றம் செய்து எதிர்காலத்தில் சட்டம் ஒழுங்கை அமுல்படுத்தி மண் அகழ்வைத் தடுத்து நிறுத்தப் புதிய அரசு செயற்படவேண்டும்.- என்றார்.

# சந்நிதியான் ஆச்சிரமத்தில் நாளை ஞானச்சுடர் 332ஆவது மலர் வெளியீடு!

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையின் ஏற்பாட்டில், ஆச்சிரம முதல்வர் சாதனைத் தமிழன் கலாநிதி மோகனதாஸ் சுவாமிகளின் தலைமையில், நாளை (19) வெள்ளிக்கிழமை காலை 10.30 மணிக்கு ஞானச்சுடர் ஆவணி மாத 332 ஆவது மலர் வெளியிட்டு வைக்கப்படவுள்ளது.

நிகழ்வில் வெளியீட்டுரையை ஆசிரியர் பொன். சந்திரவேலும், மதிப்பீட்டுரையை இளைப்பாறிய அதிபர் இரா. ஸ்ரீநடராசாவும் நிகழ்த்தவுள்ளனர்.

அதனைத் தொடர்ந்து சிறப்புப் பிரதிகளும் வழங்கப்படவுள்ளன.

# கசிப்பு உற்பத்தி நிலையங்களை முற்றுகையிட்டனர் பொலிஸார்!

## சந்தேக நபர்கள் தப்பியோட்டம்



(தில்சாத் பர்வீஸ்)

அம்பாறை மாவட்டம் சம்மாந்துறை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட மல்வத்தை திருவள்ளுவர் பகுதியில் உள்ள ஆற்று ஓரத்தில் பல காலமாக சூட்சுமமான முறையில் இயங்கி வந்த கசிப்பு உற்பத்தி நிலையம் ஒன்றும், பழைய வளத்தாப்பிட்டி பெரிய கொக்க நாரை பகுதியில் உள்ள ஆற்று ஓரத்தில் பல காலமாக சூட்சுமமான முறையில் இயங்கி வந்த கசிப்பு உற்பத்தி நிலையமும் நேற்று முன் தினம் செவ்வாய்க்கிழமை (16) சம்மாந்துறை ஊழல் ஒழிப்பு பிரிவினரால் முற்றுகையிடப்பட்டது.

சம்மாந்துறை ஊழல் ஒழிப்பு பிரிவினரினருக்குக் கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கைகளின் போது சூட்சுமமான முறையில் இயங்கி வந்த கசிப்பு உற்பத்தி நிலையத்தை முற்றுகையிட்டனர்.

இதேவேளை, கசிப்பு உற்பத்தி நிலையத்தை நடத்தி வந்த சந்தேகிக்கப்படும் சந்தேக நபர்கள் தப்பியோடியுள்ளனர். அவரைக் கைது செய்ய பொலிஸார் நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

மேலும், கசிப்பு உற்பத்திற்கு தயாராக இருந்த உபகரணங்கள் மீட்கப்பட்டு சம்மாந்துறை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

மேலும், இந்த கைது நடவடிக்கை கல்முனை பிராந்திய உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் எம்.கே. இப்னு அசாரின் ஆலோசனைக்கு அமைய, சம்மாந்துறை பொலிஸ் நிலைய பதில் பொறுப்பதிகாரி ஏ.எம்.நௌபரின் வழிகாட்டுதலில், சம்மாந்துறை பொலிஸ் நிலைய ஊழல் ஒழிப்பு பிரிவு பொறுப்பதிகாரி என்.றிபாய்டீன் தலைமையிலான குழுவினரால் முன்னெடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை சம்மாந்துறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## மிக நீண்ட காலமாக பழுதடைந்துள்ள

# களுவாஞ்சிக்குடி தபால் அலுவலகத்தின் புதிய கட்டடத்துக்கு அடிக்கல் நாட்டு வைப்பு



**(வ.சக்திவேல்)**

மட்டக்களப்பு மாவட்டத்தின் களுவாஞ்சிகுடி தபால் அலுவலகம் கடந்த யுத்த காலத்தில் இருந்து முற்றாகப் பாதிப்புற்ற நிலையில் பழுதடைந்து காணப்படுகின்றது. இதனை புனரமைப்புச் செய்து மக்கள் பாவனைக்கு விடவேண்டும் என்று அந்தப் பகுதி மக்கள் மிக நீண்டகாலமாக வேண்டுகோள் விடுத்து வந்திருந்தனர்.

இந்த நிலையில் வியாழக்கிழமை (18) சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ பிரதம அதிதியாக கலந்து கொண்டு அடிக்கல்லை நாட்டி வைத்தார்.

29.5 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டில் களுவாஞ்சிகுடி தபால் அலுவலகம் புதிதாக நிர்மாணிக்கப்படவுள்ளது.

இது நீண்ட காலமாகப் பழுதடைந்துள்ளதால் களுவாஞ்சிகுடி தபாலக நடவடிக்கைகள் வாடகை கட்டடத்திலேயே தற்போது வரைக்கும் இடம்பெற்று வருகின்றன.

இந்த நிலையில் தமது கிராமத்தில் மிக நீண்டகாலமாக யுத்தத்தில் பாதிப்புற்ற நிலையில் இதுவரையில் புனரமைக்கப்படாமல் காணப்படும் தபால் அலுவலகத்தைப் புனரமைப்புச் செய்து தருமாறு அந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்திருந்தனர். இதற்கு இணங்க இன்று (18) சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு அடிக்கல்லை நாட்டு வைத்தார்.

இதன்போது நாடாளுமன்ற உறுப்பினர் கந்தசாமி பிரபு, கிழக்கு மாகாண ஆளுநர் பேராசிரியர் ஜெந்தலால் ரத்னசேகரன், மண்முனை தென் எருவில் பற்று பிரதேச செயலாளர் உ.உதய சிறிதர், பிரதி அஞ்சல் மா அதிபர் உசித்த உலங்கமே, கிழக்கு மாகாண தபால் மா அதிபர் சி.பிரகாஷ், மற்றும் அரச உயர் அதிகாரிகள், தபால் நிணைக்கள அதிகாரிகள், உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டிருந்தனர்.







# மணிப்பூரில் 11 தீவிரவாதிகள் கைது: துப்பாக்கி உட்பட ஆயுதங்கள் பறிமுதல்

மணிப்பூரில் பல்வேறு அமைப்பு களைச் சேர்ந்த 11 தீவிரவாதிகள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இனக் கலவரத்தால் பாதிக்கப்பட்ட மணிப்பூரில் தொடர்ந்து அமைதியை ஏற்படுத்தும் முயற்சியில் பாதுகாப்பு படையினர் ஈடுபட்டுள்ளனர்.

இதனால், தீவிரவாத செயல்களில் ஈடுபடும் அமைப்புகள் கண்காணிக்கப் பட்டு வருகின்றன. மக்கள் போர் குழு, மக்கள் விடுதலைப் படை, சோஷியலிஸ்ட் புரட்சிகர கட்சி, ஐக்கிய தேசிய விடுதலை முன்னணி என பல பெயர்களில் மணிப்பூரில் தீவிரவாத இயக்கங்கள் செயல்படு கின்றன.

இவர்கள் தங்கள் இயக்கத்தினரை தீவிரவாத செயல்களில் ஈடுபட தூண் டுகின்றனர். இதனால் சட்டவிரோத செயல்களில் ஈடுபடும் தீவிரவாதி களை கைது செய்யும் நடவடிக்கையில் பாதுகாப்பு படையினர் நேற்று முன் தினம் இறங்கினர்.

இதில் பல்வேறு அமைப்புகளைச் சேர்ந்த 11 தீவிரவாதிகள் கைது செய்யப் பட்டனர். அவர்களிடம் இருந்து அமெ ரிக்க தயாரிப்பு எம்- 16 ரக துப்பாக்கி, 5 இன்சாஸ் ரக துப்பாக்கி கள், சிம் கார்டுகள் மற்றும் ஒரு ஜீப் ஆகியவை பறிமுதல் செய்யப் பட்டன.

# ஆந்திராவில் கார் - லொறி மோதி விபத்துக்குள்ளானதில் 7 பேர் பலி

ஆந்திராவில் கார் மீது லொறி மோதி விபத்துக்குள்ளானதில், சிறு வன் உட்பட 7 பேர் உயிரிழந்துள்ளனர்.

ஆந்திர மாநிலம், நெல்லூர் குர்ரம் வாரி வீதியை சேர்ந்த பால வெங் கையா (வயது 40) என்பவரின் குடும் பத்தினர் கடப்பா மாவட்டம், ஆத்மகூர் எனும் ஊரில் உறவினர் ஒருவரின் குடும்பத்தாரை துக்கம் விசாரிக்க காரில் நேற்று (17) காலை புறப்பட்டனர்.

அப்போது, நெல்லூர் மாவட்டம், சங்கம் அருகே வெரமன் எனும் எனும் இடத்தில், மும்பை தேசிய நெடுஞ்சாலையில், வீதியின் எதிரே




அதிவேகமாக தவறான பாதையில் வந்த டிப்பர் லொறி, இவர்களின் கார் மீது வேகமாக மோதியது. இதில் கார், டிப்பர் லொறியின் அடியில் சிக்கி கொண்டது.

இந்த கோர விபத்தில், காரில் பய ணம் செய்த பால வெங்கையா (வயது 40), இவரது மனைவி ராதா (வயது 38), இவரின் சகோதரர் நிவா சுலு (வயது 42), நிவாசுலுவின் மனைவி லட்சுமி (வயது 40), உறவினர் ஷேரம்மா (வயது 42), சாரதி தெல்ல குண்ட்ல நிவாசுலு (வயது 48) மற்றும் 4 வயது சிறுவன் ஆகியோர் சம்பவ இடத்தி லேயே பரிதாபமாக உயிரி ழந்தனர்.

லொறி சாரதியின் அலட்சியமே இந்த விபத்துக்கு காரணம் என முதற் கட்ட விசாரணையில் தெரியவந் துள்ளது.

# தீவிரவாத தாக்குதல் நடந்தால் ஒபரேஷன் சிந்தூர் தொடங்கும்

### *அமைச்சர் ராஜ்நாத் சிங் எச்சரிக்கை*



எதிர்காலத்தில் தீவிரவாத தாக்கு தல் நடந்தால் ஆபரேஷன் சிந்தூர் தொடங்கும் என்று அமைச்சர் ராஜ் நாத் சிங் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

ஹைதராபாத்தில் நேற்று நடை பெற்ற விடுதலை தின சிறப்பு நிகழ்ச் சியில் பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங் இதுதொடர்பில் மேலும் உரை யாற்றுகையில், "இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக் கும் இடையிலான போர் நிறுத்தம் யாரோ ஒருவரின் தலையீட்டால் ஏற்பட்டதா என்று சிலர் கேட்கிறார்கள். நான் அதை தெளிவுபடுத்த விரும்பு கிறேன்.

தீவிரவாதிகளுக்கு எதிரான நடவ டிக்கை யாரோ ஒருவரின் தலையீட் டால் நிறுத்தப்படவில்லை. இன்றைய இந்தியாவிடம் எதிரிகளின் கண்க ளைப் பார்த்து பதிலளிக்கும் திறன் உள்ளது.

இந்தியா பாகிஸ்தான் இடையே யான மோதலை நிறுத்தியதில் 3 ஆம் தரப்புக்கு பங்கு இல்லை என் பதை இந்தியா ஏற்கெனவே திட்ட வட்டமாகத் தெரிவித்துள்ளது. அதைத் தான் தற்போது பாகிஸ்தானும் ஒப்புக் கொண்டுள்ளது. எதிர்காலத்தில் ஏதே னும் தீவிரவாத தாக்குதல் நடந்தால் ஒபரேஷன் சிந்தூர் மீண்டும் தொடங் கும். இதில் சமரசத்துக்கு இடமில்லை." என்று தெரிவித்தார்.



# காசாவிற்குள் நுழைந்தது இஸ்ரேலிய இராணுவம்

காசா நகரத்தின் பாரியளவிலான குடியிருப்பு பிரதேசமான சேக் ரத்வானுக்குள் இஸ்ரேலிய தாங்கிகள் மற்றும் இராணுவ வாகனங்கள் நுழைந்தன என உள்ளூர்வாசிகள் மற்றும் நேரில் கண்ட சாட்சிகள் கூறுகின்றனர்.

இந்த ஊடுருவலை காணொலிக் காட்சிகள் காட்டுகின்றன.

இஸ்ரேலிய படைகள் ஊடுருவியுள்ள சேக் ரத்வான் பிரதேசம், காசா நகரத்தின் மிகவும் அடர்த்தியான மக்கள் தொகை கொண்ட பகுதிகளில் ஒன்றாகும்.

இந்தநிலையில், ஹமாஸால் பிடிக்கப்பட்ட பணயக்கைதிகளை விடுவிப்பதும், குழுவின் ‘கடைசி கோட்டை’ என விபரிக்கப்படும் இடத்தில் 3,000 போராளிகளைத் தோற்கடிப்பதுமே, காசா நகரத் தாக்குதலின் நோக்கம் என இஸ்ரேல் கூறுகிறது.

எனினும் இஸ்ரேலின் இந்த நடவடிக்கைக்கு சர்வதேச ரீதியில் பாரிய எதிர்ப்பு வெளியிடப்பட்டு வருகிறது.





# போதைப்பொருள் நாடுகளின் பட்டியலில் இந்தியாவை சேர்த்தார் டொனால்ட் ட்ரம்ப்

அமெரிக்கா வெளியிட்டுள்ள சட்ட விரோதமாகப் போதைப்பொருள் தயாரித்தல் மற்றும் கடத்தலில் ஈடுபடும் 23 நாடுகளின் பட்டியலில் இந்தியாவும்உள்ளடக்கப்பட்டுள்ளதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

சட்ட விரோதமாகப் போதைப் பொருள் தயாரித்தல் மற்றும் கடத்தலில் ஈடுபடும் நாடுகள் பட்டியலை அமெரிக்க நாடாளுமன்றத்தில் ஜனாதிபதி ட்ரம்ப் வெளியிட்டார்.

23 நாடுகளைக் கொண்ட அந்தப் பட்டியலில் ஆப்கானிஸ்தான், சீனா, பாகிஸ்தான் உள்ளிட்ட நாடுகளுடன் இந்தியாவின் பெயரையும் அவர் சேர்த்து இருந்தார்.



போதைப்பொருள் கடத்தல் மற்றும் அவற்றின் தயாரிப்பில் முக்கியமாக ஈடுபட்டுள்ள இந்த நாடுகளின் செயலால் அமெரிக்கா மற்றும் அதன் குடிமக்களின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டு இருப்பதாக அந்தப் பட்டியலில் ட்ரம்ப் குறிப்பிட்டுள்ளார்.

இந்தக் குற்றச்செயல் தடுப்பில் தவறிவிட்டதாக ஆப்கானிஸ்தான், பொலிவியா, மியன்மார் உள்ளிட்ட 5 நாடுகளைக் குறிப்பிட்டு இருந்த அவர், போதைப்பொருள் தடுப்புக்கு எதிராக தீவிர நடவடிக்கை எடுக்குமாறும் அந்த நாடுகளைக் கேட்டுக் கொண்டுள்ளார்.தயாரிப்பு மற்றும் கடத்தல் நாடு களின் பட்டியலில் இந்தியாவைச் சேர்த்த ட்ரம்பின் நடவடிக்கை இந்தியாவில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

கனடா முரசு

வியாழக்கிழமை | 18/09/2025

## வங்கி வட்டி வீதம் குறைக்கப்பட்டது




02



# கனடாவில் நவம்பர் 4 ஆம் திகதி வரவு செலவுத் திட்டம் சமர்ப்பிப்பு

**கனடாவில் எதிர்வரும் நவம்பர் மாதம் 4 ஆம் திகதி வரவு செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்பட உள்ளதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.**

**கனடாவின் நிதி அமைச்சர் பிரான் சுவா-பிலிப் சாம்பெயின் இது குறித்து அறிவித்துள்ளார்.**

**எதிர்வரும் நவம்பர் 4 ஆம் திகதி வரவுசெலவுத்திட்டம்நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என்று குறிப்பிட்டுள்ளார்.**

இது பிரதமர் மார்க் கார்னி தலைமையிலான லிபரல் அரசின் முதல் வரவு செலவுத் திட்டம் என்பது குறிப்பிடத்தக்கது.

இதனால் இந்த வரவு செலவுத் திட்டம் அரசியல் வட்டாரத்தில் சிறப்பு கவனத்தை ஈர்த்துள்ளது.

அமெரிக்காவுடன் ஏற்பட்டுள்ள வர்த்தக பதற்றத்தால் கனடா பொருளாதாரம் பாதிக்கப்படாமல் காப்பதற்கும், செலவுகளை குறைப்பதோடு புதிய முதலீடுகளையும் அறிவிப்பதற்கும் இந்த வரவு செலவுத் திட்டம் உதவும் என பிதமர் கார்னி வலியுறுத்தியுள்ளார்.

# இந்திய தூதரகத்தை முற்றுகையிடுவோம்; காலிஸ்தான் பயங்கரவாதிகள் எச்சரிக்கை



கனடாவில் உள்ள இந்திய துணை தூதரகத்தை முற்றுகையிட போவதாக காலிஸ்தான் ஆதரவு பயங்கரவாதிகள் மிரட்டல் விடுத்துள்ளனர்.

அமெரிக்காவை தளமாக கொண்ட காலிஸ்தானி ஆதரவு பயங்கரவாத அமைப்பு இந்த அறிவிப்பை வெளியிட்டு இருக்கிறது.

கனடா வான்கூவரில் உள்ள இந்திய துணை தூதரகத்தை முற்றுகையிட்டு 12 மணி நேரம் போராட்டம் நடத்த போவதாக பயங்கரவாத

03






# வங்கி வட்டி வீதம் குறைக்கப்பட்டது

கனடாவில் வங்கி வட்டி வீதம் குறைக்கப்பட்டுள்ளதாக அந்நாட்டு மத்திய வங்கி அறிவித்துள்ளது.

முக்கிய வட்டி விகிதத்தை 0.25 சதவீத புள்ளிகளால் குறைத்து 2.5 சதவீதமாக நிர்ணயித்துள்ளது.

உலக வர்த்தகத் தடைகள் மற்றும் சிக்கல்கள் காரணமாக உலக பொருளாதார வளர்ச்சி மந்தமாகி வரும் நிலையில், இந்த வட்டி விகிதக் குறைப்பை பொருளாதார நிபுணர்கள் முன்கூட்டியே எதிர்பார்த்திருந்தனர்.

ஓகஸ்ட் மாதத்தில் நுகர்வோர் விலைகள் கடந்த ஆண்டு இதே காலத்துடன் ஒப்பிடுகையில் 1.9 சதவீதம் உயர்ந்திருந்ததாக கனடிய புள்ளிவிபரவியல் திணைக்களம் அறிவித்துள்ளது.

இது இந்த ஆண்டு மார்ச் மாதத்திற்குப் பிறகு மத்திய வங்கி வட்டி விகிதத்தை குறைக்கும் முதல் முறை இதுவாகும்.

கனடாவின் பலவீனமான தொழில் சந்தை நிலையும், அமெரிக்க வரி விதிப்பிற்கான எதிர்வினை நடவடிக்கைகளும் இந்த வட்டி குறைப்புக்கான ஏதுக்கள் என கனடிய மத்திய வங்கி ஆளுநர் டிஃப் மாக்லெம் தெரிவித்துள்ளார்.

பொருளாதாரம் பலவீனமடைந்துள்ள நிலையில், பணவீக்கம் அதிகரிக்கும் அபாயம் குறைந்துள்ளதால், வட்டி விகிதத்தை குறைப்பது சரியான முடிவு என நாங்கள் கருதினோம் என தெரிவித்துள்ளார்.

இந்த ஆண்டு இரண்டாம் காலாண்டில் கனடாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தி சுமார் 1.5 சதவீதம் குறைந்துள்ளது.

அமெரிக்க சுங்க வரிகள் மற்றும் பொருளாதார நிச்சயமற்றத் தன்மையினால் ஏற்றுமதிகள் 27 சதவீதம் வீழ்ச்சி கண்டன என்பது குறிப்பிடத்தக்கது.

# சர்வதேச கவனத்தை ஈர்த்த மொன்ட்ரியால் விபத்து



கனடாவின் மொன்ட்ரியால் நகரின் வீதிகளின் தரம் குறித்து மீண்டும் கடும் விமர்சனங்கள் எழுந்துள்ளன. கடந்த ஞாயிற்றுக்கிழமை நடந்த சர்வதேச சைக்கிளோட்டப் போட்டியின் போது டச்சு சைக்கிள் வீரர் பாஸ்கல் எங்க்ஹோான் வீதி குழியில் சிக்கி விபத்துக்குள்ளானார்.

120 கிலோ மீற்றர் தூரம் கடந்து மவுண்ட்-ராயல் ஏற்றத்தில் நடந்த இந்த விபத்தில், எங்க்ஹோான் வீதியில் வீழ்ந்து போட்டியிலிருந்து

03




# ஒன்டாரியோவில் சடலம் மீட்பு: பொலிஸ் விசாரணை ஆரம்பம்

ஒன்டாரியோ மாகாணத்தின் பிரேஸ்பிரிட்ஜ் பகுதியில் உள்ள டோரன்ஸ் பகுதியில் மர்மமான சடலம் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

ஹார்டி லேக் சாலையில் சடலம் இருப்பதாக வந்த தகவலைத் தொடர்ந்து, ஒன்டாரியோ மாகாண பொலிஸார் பிரேஸ்பிரிட்ஜ் பிரிவு சம்பவ இடத்துக்கு விரைந்து சென்றது.கடந்த ஞாயிற்றுக்கிழமை மற்றும் திங்கள் கிழமைக்குள் ஹார்ட்டி லேக் சாலை பகுதியில் இருந்தவர்கள் யாரேனும் டாஷ்கேம் காட்சிகள் அல்லது தொடர்புடைய தகவல்களை வைத்திருந்தால் பகிருமாறு பொலிஸார் கோரியுள்ளனர்.

இந்த சம்பவத்தினால் பொதுமக்களுக்கு உடனடி பாதுகாப்பு அச்சுறுத்தல் எதுவும் இல்லை என பொலிஸார் உறுதிப்படுத்தியுள்ளனர்.

இந்த சம்பவம் தொடர்பில் தகவல் தெரிந்தவர்கள் 1-888-310-1122 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## சர்வதேச...

(02 ஆம் பக்கத் தொடர்ச்சி)

விலக வேண்டிய நிலை ஏற்பட்டது.

இந்த காட்சி சர்வதேச ஊடகங்களில் பகிரப்பட்டது.

மொன்ட்ரியால் குடியிருப்பவர்கள் வீதிகளின் மோசமான நிலையை பற்றி கடும் அதிருப்தி வெளியிட்டுள்ளனர்.

மொன்ட்ரியால் வீதிகளின் குழி பிரச்சினை புதியதல்ல; கடந்த 50 ஆண்டுகளாகவே நகரில் சாலைகள் பழுதடைந்த காட்சிகள் தொலைக்காட்சியில் வெளியாகியுள்ளன.

நிபுணர்கள், மொன்ட்ரியால் நகரின் கடுமையான குளிர்-உறைதல் சுழற்சி, சாலையின் தரம் மற்றும் பனி உருக்க உப்பு ஆகியவை வீதிகளை விரைவாக சேதப்படுத்துவதாகக் கூறுகின்றனர்.

நகரின் சாலைகளில் மூன்றில் ஒரு பங்கு மோசமான நிலையில் காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்நிலையில், இந்த வார இறுதியில் நடைபெறவுள்ள மொன்ட்ரியால் மெரத்தான் ஓட்டத்துக்காக 32,000 பங்கேற்பாளர்கள் வீதியில் ஓட உள்ளனர் என தெரிவிக்கப்படுகின்றது.

## இந்திய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைப்பு கூறி உள்ளது.

அந்த அறிக்கையில், 2023ம் ஆண்டு ஹர்தீப்சிங் நிஜார் படுகொலையில் இந்தியர்களின் பங்கு குறித்து விசாரணை நடத்தப்படுவதாக கனடா பிரதமர் ட்ரூடோ பார்லி.யில் அறிவித்தார்.

2 ஆண்டுகள் கடந்தும் காலிஸ்தான் இயக்கத்தினரை குறி வைத்து உளவு அமைப்புகள் செயல்படுகின்றன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அறிக்கையின் ஊடே, புதிய கமிஷனர் தினேஷ் பட்நாயக் முகத்தை காட்டும் படத்தை போட்டு அதை குறி வைப்பது போன்று போட்டோ ஒன்று சித்தரிக்கப்பட்டுள்ளது. கனடாவில் முந்தைய பிரதமர் ஜஸ்டின் இருந்த போது காலிஸ்தான் ஆதரவு பயங்கரவாதிகளுக்கு ஆதரவாக செயல்பட்டு வந்தார்.

இதனால் இந்தியா- கனடா உறவு சீர்கெட்டது. ஜஸ்டின் பதவி விலகி புதிய அரசு பொறுப்பேற்றுள்ள நிலையில், மீண்டும் காலிஸ்தான் ஆதரவு பயங்கரவாதிகள் செயற்பட தொடங்கியுள்ளனர்.